**<u>அசல் வழக்கு எண். 22/2019</u>**

21.07.2025

**பெயர் – விஜயராஜ்** (PW1)

**<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

23.01.2025 ம் தேதி குறுக்கு விசாரணை பாரா 1 முதல் 5 வரை பதிவு செய்யப்பட்டது. இன்று பாரா 6 முதல் பதிவு செய்யப்படுகிறது.

(6) பிரதிவாதி யாருடன் வந்து என்னிடம் பணம் கடன் கேட்டார் என்றால் அவரது மகனுடன் வந்து கேட்டார். அவர் கடன் கேட்டு ஒரு வாரம் கழித்து நான் கொடுத்தேன். 1ம் பிரதிவாதி இறந்த பின்பு செலுத்தப்பட்டதாக நான் சொல்லும் 16 ஆயிரத்தை அசலில் வரவு வைத்தேனா அல்லது வட்டியில் வரவு வைத்தேனா என்றால் பணத்தை வைத்துக்கொள்ளுங்கள் கிரையம் சமயத்தில் தொகை செட்டில்மெண்ட் செய்யும் போது பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிக் கொடுத்தார்கள். நான் 1ம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த போது முதல் மாத வட்டியை பிடித்துவிட்டு கொடுக்கவில்லை என்றால் நான் கடன் கொடுக்கவில்லை கிரையத்திற்கு தொகை கொடுத்தேன்.

(7) கிரைய உடன்படிக்கை ஆவணம் முத்திரைத்தாள் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. பல வருடங்கள் ஆகிவிட்டது. முத்திரைத்தாளை யார் வாங்கி வந்தார்கள் என்றால் பத்திர எழுத்தர் தான் அவற்றை பார்த்துக்கொண்டார். ராஜு வாங்கிய கடன் தொகை ரொக்கமாக கொடுக்கப்பட்டதா அல்லது வங்கியில் செலுத்தப்பட்டதா என்றால் கடன் கொடுக்கவில்லை தொகை ரொக்கமாக கொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் நான் செலுத்திய தொகையை வட்டியுடன் திருப்பித் தரக்கோரும் மாற்றுப் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

(8) பணம் கொடுக்கும் போது 1ம் பிரதிவாதியிடம் அவருடைய அசல் வீட்டு பட்டாவை வாங்கிவிட்டேன் என்றால் ஞாபகம் இல்லை. பணம் கடன் கொடுத்ததற்காக பெயரளவில் எழுதப்பட்ட கிரைய ஒப்பந்தம் என்றும் அதை வைத்து வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/- Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்